அரசு மைய அச்சகம், சென்னை–600 079

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2015–2016

## மானியக் கோரிக்கை எண். 9

**திரு. எஸ். அப்துல் ரஹீம்**
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2015

## பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இடஒதுக்கீடு | 3 |
| 3. | கல்வி | 7 |
| 4. | கல்வி உதவித் தொகைத் திட்டங்கள் | 8 |
| 5. | இலவசக் கல்வி | 18 |
| 6. | இணையதளம் மூலம் கல்வி உதவித் தொகை ஒப்பளிப்பு செய்தல் | 24 |
| 7. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின கிராமப்புற பள்ளி மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் | 25 |
| 8. | விடுதிகள் | 27 |
| 9. | விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டுதல் | 40 |
| 10. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம் | 42 |
| 11. | கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் | 44 |
| 12. | சீருடைகள் வழங்குதல் | 50 |
| 13. | பரிசுத் திட்டங்கள் | 52 |
| 14. | பேரறிஞர் அண்ணா நினைவு விருது | 57 |
| 15. | தந்தை பெரியார் நினைவு விருது | 58 |
| 16. | முதலமைச்சரின் தகுதி பரிசுத் திட்டம் | 60 |
| 17. | சிறந்த தனியார் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி பயில்வதற்கு நிதியுதவி வழங்குதல் | 62 |
| 18. | மிதிவண்டிகள் வழங்குதல் | 64 |
| 19. | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 66 |
| 20. | வீட்டுமனைகள் வழங்குதல் | 70 |
| 21. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 72 |
| 22. | சீர்மரபினர் நல வாரியம் | 82 |
| 23. | தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் | 85 |
| 24. | வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம் | 90 |
| 25. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 91 |
| 26. | சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது | 93 |
| 27. | சிறுபான்மையினர் நலன் | 94 |
| 28. | பிற்படுத்தப்பட்டோர் இஸ்லாமியருக்கு தனி இடஒதுக்கீடு | 95 |
| 29. | சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை | 95 |
| 30. | சிறுபான்மையினர் விடுதிகள் | 102 |

| | | |
|---|---|---|
| 31. | சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்குதல் | 104 |
| 32. | உருது மொழி பயிலும் மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்குதல் | 107 |
| 33. | முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் | 108 |
| 34. | சிறுபான்மையினருக்கான பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் | 110 |
| 35. | சிறுபான்மையினருக்கான மறுவாழ்வு நிதி உதவித் திட்டம் | 111 |
| 36. | உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம் | 112 |
| 37. | ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான நிதியுதவி | 115 |
| 38. | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 116 |
| 39. | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 118 |
| 40. | தமிழ்நாடு வக்ஃப் வாரியம் | 125 |
| 41. | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு | 131 |
| 42. | இணைப்பு | 138 |

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9
## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2015–2016

**முன்னுரை**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினரை சமூக பின்னடைவிலிருந்து விடுவிக்கவும், அவர்களது பொருளாதார மேம்பாட்டிற்கும் பல்வேறு நலத்திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் இவ்வரசு முக்கியத்துவம் அளிக்கிறது. கல்வியே இம்மக்களின் வளர்ச்சிக்கான திறவுகோல் என்பதால், இம்மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இச்சமூக மக்களின் நலனுக்காக விடுதி வசதிகள் ஏற்படுத்தித் தருதல், கல்வி உதவித் தொகை வழங்குதல், பரிசுகள் வழங்குதல், கிராமப்புற மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்குதல், மிதிவண்டிகள் வழங்குதல், சலவைப் பெட்டிகள் வழங்குதல், தையல் இயந்திரங்கள் வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், பிரமலைக் கள்ளர் இனத்தவர் மேம்பாட்டிற்காக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்துதல், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் சுய தொழில் துவங்க கடனுதவி வழங்குதல், ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள நிதி உதவி வழங்குதல், உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல், ஹஜ் புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 2. இடஒதுக்கீடு

அரசு பணிகளில் நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் மாணவ / மாணவியர் சேர்க்கை ஆகியவற்றிற்கான இடஒதுக்கீடு கொள்கையினை செயல்படுத்துவதில் தமிழ்நாடு பல்லாண்டு காலமாக முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. 1921 ஆம் ஆண்டு முதல் இடஒதுக்கீட்டுக் கொள்கை தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக இப்பிரிவினர் பெரும் பயனடைந்து சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் கணிசமான முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேற்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் என்ற மதிப்பீட்டின் அடிப்படையில், இடஒதுக்கீட்டின் அளவு பெரும்பான்மை மக்களின்



தேவைக்கேற்ப படிப்படியாக உயர்ந்து, தற்போது 69 விழுக்காடு இடஒதுக்கீடு தமிழகத்தில் நடைமுறையில் இருந்து வருகிறது. (பிற்படுத்தப்பட்டோர் – 26.5%, பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு முஸ்லீம்கள் – 3.5%, மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் – 20%, ஆதிதிராவிடர் – 18% மற்றும் பழங்குடியினர் – 1%)

இந்திரா சஹானி எதிர் மைய அரசு வழக்கில் (மண்டல் குழு வழக்குகள்) இடஒதுக்கீட்டினை 50 விழுக்காடு என்ற அளவிற்கு கட்டுப்படுத்தி இந்திய உச்சநீதிமன்ற அரசமைப்பு நீதியர் ஆயம் தீர்ப்பு அளித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தும் பொருட்டு 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர்,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு (கல்வி நிலையங்களில் இடங்களையும், மாநில அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது இடங்களை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 45/1994) நிறைவேற்றியது. பின்னர், அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 31–பி–இன் கீழ் பாதுகாப்பு பெறும் பொருட்டு தமிழ்நாடு சட்டம் 45/1994 இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டம் 45/1994–ன் செல்லுந்தன்மையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் மீது 13.07.2010 அன்று உச்சநீதிமன்றம் எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை மாநில அரசு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அளிக்க வேண்டும் என்றும், அவ்விவரங்களின் அடிப்படையில் மாநிலத்தில் உள்ள பல்வேறு பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டிய



இடஒதுக்கீட்டின் அளவினை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் முடிவு செய்ய வேண்டுமென்றும் தீர்ப்பளித்தது. மாநில அரசால் வழங்கப்பட்ட எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை ஆய்வு செய்த தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டின் அளவு சரியென பரிந்துரை அளித்தது.

ஆணையம் அளித்த பரிந்துரையினை அரசு ஏற்றுக் கொண்டு கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கை மற்றும் மாநில அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்கள் ஆகியவற்றில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை உறுதி செய்து 11.07.2011 அன்று அரசாணை வெளியிடப்பட்டது ஓர் வரலாற்று சாதனை நிகழ்வாகும்.

### 3. கல்வி

பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமுதாய மேம்பாட்டிற்கும் கல்வி மிகவும் இன்றியமையாததாகும். இப்பிரிவு மக்களின் கல்வி அறிவினை வளர்ப்பதிலும் இவர்களின் கல்வி தரத்தினை மேம்படுத்துவதிலும், இவ்வரசு சிறப்பான கவனம் செலுத்தி வருகிறது. இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மொத்தத் தொகையில் பெருமளவிலான தொகை இச்சமுதாய மக்களின் கல்வி வளர்ச்சிக்கான திட்டங்களுக்காகவே செலவிடப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களின் நலனுக்காக விடுதிகள் மற்றும் பிரமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்திற்காக மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் ஆகியன நடத்தப்பட்டு வருகின்றன. தனியார்



வாடகை கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டித்தரும் மிகப்பெரும் திட்டத்தை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. இப்பிரிவு மாணவ / மாணவியர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு கல்வி உதவித் தொகைகள், சீருடைகள், புத்தகங்கள் மற்றும் மிதிவண்டிகள் வழங்கும் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

### 4. கல்வி உதவித்தொகைத் திட்டங்கள்

ஏழை, எளிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் அவர்களது கல்வியை இடைவிடாது தொடர உதவும் பொருட்டு பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் இலவசக் கல்வி ஆகிய மூன்று வகையான கல்வி உதவித்தொகைத் திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக 2013–2014 ஆம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

**4.1. <u>பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை</u>**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்தரவிட்டுள்ளதால், இவர்கள் எவ்விதச் சிறப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மேலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது. 10 ஆம் வகுப்பு தமிழ்வழிக்



கல்வி பயிலும் மாணவ, மாணவியர் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**<u>ஆங்கிலவழிப் படிப்பிற்கான கற்பிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஈடுசெய்தல்</u>**

**<u>பிற்படுத்தப்பட்டோர்</u>**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியரின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி எவருமிருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு 6 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.20 வீதம் பத்து மாதங்களுக்கு ரூ.200 என்ற அளவிலும், 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.25 வீதம் பத்து

மாதங்களுக்கு ரூ.250 என்ற அளவிலும் வழங்கப்படுகிறது. மேலும் 10 ஆம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தேர்வுக் கட்டணமும் முழுமையாக ஈடு செய்யப்படுகிறது.

**<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்</u>**

ஆங்கிலவழிக் கல்வி படிப்பிற்கான கற்பிப்புக் கட்டணம் மற்றும் தேர்வு கட்டணம் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் அளவிலேயே வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 98,523 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.251.20 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



| பயனடைந்த மாணவ / மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/ சீம | மொத்தம் | பிவ | மிபிவ / சீம | மொத்தம் |
| 49,734 | 48,789 | 98,523 | 133.61 | 117.59 | 251.20 |

இத்திட்டத்திற்கு 2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.133.45 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.129.93 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.263.38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.2. <u>பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை</u>**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ் மற்றும் ஆங்கிலவழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்தரவிட்டுள்ளதால், இவர்கள் எவ்விதச் சிறப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. அரசு மற்றும் அரசு

உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் தமிழ்வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்வழிக் கல்வி பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் செலுத்த வேண்டிய தேர்வுக் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**<u>பிற்படுத்தப்பட்டோர்</u>**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் ஆங்கிலவழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியரின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.2,00,000–க்கு மிகாமல் இருக்கவேண்டும் மற்றும் குடும்பத்தில் பட்டதாரி எவருமிருக்கக்கூடாது என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500 கற்பிப்புக் கட்டணமாக



வழங்கப்படுகிறது. மேலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பில் ஆங்கிலவழிக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு தேர்வு கட்டணம் மேலே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு முழுமையாக ஈடு செய்யப்படுகிறது.

**<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்</u>**

ஆங்கிலவழிக் கல்வி பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கப்படும் கட்டண அளவிலேயே எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்படுகிறது.

**<u>கல்லூரி மாணவர்களுக்கான பள்ளிமேற்படிப்பு கல்வி உதவித்தொகை வழங்குதல்</u>**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 2011–2012 ஆம் ஆண்டு வரை பட்டயப் படிப்பு, பட்டமேற்படிப்பு, தொழிற்பயிற்சிப் படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு பள்ளிமேற்படிப்பு கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் சிறப்புக் கட்டணம், கற்பிப்புக் கட்டணம், புத்தகக் கட்டணம் ஆகியன கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட அளவிலும், தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்பட்டு வந்தது.



இக்கட்டணங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு 2012–2013 ஆம் ஆண்டு முதல் பள்ளிமேற்படிப்பு திட்டத்தின் கீழ் அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கும் விகிதத்தில் சிறப்புக்கட்டணம் மற்றும் கற்பிப்புக் கட்டணம் முழுமையாக வழங்கப்படுகிறது. மேலும் 2013–2014 ஆம் ஆண்டு முதல் கல்வி உதவித்தொகை பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000–லிருந்து ரூ.2,00,000–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (Shift) மற்றும் மாலை நேர வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் **2,13,336** மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ. **7,533.05** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

| **பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை** | | | **செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ /சீம | மொத்தம் | பிவ | மிபிவ /சீம | மொத்தம் |
| 1,28,313 | 85,023 | 2,13,336 | 4,638.04 | 2,895.01 | 7,533.05 |

இத்திட்டத்திற்கு **2015–2016** ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**4,638.16** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**2,898.38** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**7,536.54** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## **5. இலவசக் கல்வி**

### **5.1 . பட்டப்படிப்பு**

இலவசக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு சிறப்புக் கட்டணம், திரும்பப்பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் எவ்வித நிபந்தனையும் இன்றி வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் **2014–2015** ஆம் ஆண்டில் **1,59,366** மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.**2,134.80** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ /சீம | மொத்தம் | பிவ | மிபிவ /சீம | மொத்தம் |
| **89,954** | **69,412** | **1,59,366** | **1,219.80** | **915.00** | **2,134.80** |

இத்திட்டத்திற்கு **2015–2016** ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு **ரூ.1,225** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு **ரூ.915** இலட்சமும் ஆகமொத்தம் **ரூ.2,140** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.2. <u>பட்டயப்படிப்பு</u>**

இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பினைப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு



கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் அவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் **ரூ.2,00,000**–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டய / பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் **2014–2015** ஆம் ஆண்டில் **14,511** மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் **ரூ.531.13** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ /சீம | மொத்தம் | பிவ | மிபிவ /சீம | மொத்தம் |
| **9,356** | **5,155** | **14,511** | **332.26** | **198.87** | **531.13** |

இத்திட்டத்திற்கு **2015–2016** ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**325** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**214.61** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**539.61** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.3. தொழிற்படிப்பு**

இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு தொழிற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவிலும்,



தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் அவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.**2,00,000**–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் அவர்களது குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் **2014–2015** ஆம் ஆண்டில் **1,75,575** மாணவ , மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.**8,618.96** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ /சீம | மொத்தம் | பிவ | மிபிவ /சீம | மொத்தம் |
| **1,12,495** | **63,080** | **1,75,575** | **5,447.57** | **3,171.39** | **8,618.96** |

இத்திட்டத்திற்கு **2015–2016** ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**5,453.85** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு

ரூ.3,181.69 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.8,635.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப்பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு, கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் மாதந்தோறும் வழங்கப்படும் உண்டி, உறையுள் கட்டணத்தை தொழிற் கல்வி படிப்புகளுக்கு ரூ.75 முதல் ரூ.140 என்பதை ரூ.350 ஆகவும், ஐடிஐ / பட்டயப்படிப்பு மற்றும் முதுகலைப் படிப்புகளுக்கு ரூ.75 முதல் ரூ.90 என்பதை ரூ.225 ஆகவும், 11, 12 ஆம் வகுப்பு மற்றும் இளங்கலை படிப்புகளுக்கு ரூ.75 முதல் ரூ.80 என்பதை ரூ.175 ஆகவும் 2013–2014 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.



## 6. இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்தல்

கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகைகள் துரிதமாக வழங்கும் பொருட்டும், இத்திட்டத்தின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்யும் வகையிலும், பணி முன்னேற்றத்தினைத் தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டும் மின்னாளுமை திட்டத்தின் கீழ் தேசிய தகவல் தொகுப்பு மையத்தால் மென்பொருள் உருவாக்கப்பட்டு இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது (www.escholarship.tn.gov.in). இதன் மூலம் கல்வி உதவித்தொகைக் கேட்புகளை கல்லூரிகள் அனுப்புவதில் தொடங்கி மாணவ, மாணவியருக்கு உதவித்தொகைகள்

வழங்கும் வரையிலான விவரங்களை அரசு, இயக்குநரகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இணையதளம் வாயிலாக துல்லியமாக கண்காணிக்கவும், பயன்பெறும் மாணவ, மாணவியர் கல்வி உதவித்தொகை வழங்கப்படுவதை அறிந்து கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், 2013–2014 ஆம் ஆண்டு முதல் கல்லூரியில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை அவர்களின் வங்கி கணக்கிற்கே நேரடியாக மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வழங்கப்படுகிறது.

**7. <u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்</u>**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த கிராமப்புற பெண் குழந்தைகளிடையே கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும், அப்பெண்



குழந்தைகள் படிப்பை இடையில் நிறுத்துவதைக் குறைக்கவும், கிராமப்புறங்களில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவியர் ஒவ்வொருவருக்கும் வருடத்திற்கு ரூ.500 என்ற வீதத்திலும், 6ஆம் வகுப்பில் பயிலும் மாணவியர் ஒவ்வொருவருக்கும் வருடத்திற்கு ரூ.1,000 என்ற வீதத்திலும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூ.7 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. அதிக எண்ணிக்கையில் கிராமப்புற மாணவியர் பயன்பெற ஏதுவாக 2012–2013 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு இருமடங்குக்கும் மேலாக உயர்த்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 2,38,488 மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.1,434.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2015–2016 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.1,434.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. விடுதிகள்**

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை எவ்வித இடையூறுமின்றி தொடர்வதற்கு ஏதுவாக இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 1,315 விடுதிகள் மாநிலம் முழுவதும் இயங்கி வருகின்றன. இதில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் 721



விடுதிகளும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கீழ் 580 விடுதிகளும் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கீழ் 14 விடுதிகளும் இயங்கி வருகின்றன. இவ்விடுதிகளில் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000–க்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர் சேர அனுமதிக்கப்படுகின்றனர். இவ்விடுதிகளில் 82,164 மாணவ, மாணவியர் எவ்விதக் கட்டணமுமின்றி தங்கிப் படித்துப் பயனடைகின்றனர்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியரின் எண்ணிக்கைக்கு கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு 2011–2012 ஆம் ஆண்டு முதல் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் முகாம்வாழ் இலங்கைத்

தமிழர்களின் குழந்தைகள் தங்கிப் பயிலும் வகையில், ஒவ்வொரு விடுதியிலும் தலா 5 இடங்கள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2012–2013 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள தோட்டங்களில் பணிபுரிந்து வரும் கூலித் தொழிலாளர்கள் அவர்களது குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு இச்சான்றிதழ்களுக்குப் பதிலாக அவர்களின் பெற்றோர் அளிக்கும் உறுதிமொழியின் அடிப்படையில் விடுதிகளில் சேர்த்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

20.09.2011 முதல் விடுதிகளில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கான மாதாந்திர உணவுக் கட்டணம்



ரூ.450–லிருந்து ரூ.650–ஆகவும், கல்லூரி விடுதி மாணவருக்கு ரூ.550–லிருந்து ரூ.750 ஆகவும் உயர்த்தப்பட்டது. இதன் பின்னர் மாணவர்களின் நலன் கருதி மீண்டும் 01.03.2013 முதல் பள்ளி விடுதிகளுக்கான உணவுக் கட்டணம் ரூ.650–லிருந்து ரூ.755–ஆகவும், கல்லூரி விடுதிகளுக்கான உணவுக் கட்டணம் ரூ.750–லிருந்து ரூ.875–ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. அதே போல மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.25–லிருந்து ரூ.50–ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.35–லிருந்து ரூ.75–ஆகவும் 1.2.2012 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

பண்டிகை நாட்களில் விடுதி மாணவர்களுக்கு சிறப்பு உணவு வழங்க ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட கட்டணம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு பண்டிகை ஒன்றுக்கு

ரூ.2–லிருந்து ரூ.20–ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.3–லிருந்து ரூ.40–ஆகவும் உயர்த்தி 2013–2014 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு ரூ.19,828.09 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.13,947.47 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.11,256.12 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.25,203.59 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8.1. விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் மாணவ / மாணவியருக்கு மாநில அளவில் பரிசு வழங்கும் திட்டம்**

பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கான



பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ / மாணவியருக்கும், அதேபோன்று மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பிற்கான பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களை பெறும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியருக்கும் 2011–2012 ஆம் ஆண்டு முதல் தனித்தனியே கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன.

| பரிசு விவரம் | 10 ஆம் வகுப்பு | 12 ஆம் வகுப்பு |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ.10,000 | ரூ.10,000 |
| இரண்டாம் பரிசு | ரூ.7,000 | ரூ.7,000 |
| மூன்றாம் பரிசு | ரூ.5,000 | ரூ.5,000 |

இத்திட்டத்திற்கு 2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.1.70 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.1.20 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.2.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8.2. சிறந்த காப்பாளர்கள் / காப்பாளினிகளுக்கு மாநில அளவிலான விருதுகள் வழங்குதல்**

ஆண்டுதோறும் விடுதிகளில் செம்மையான முறையில் பணிபுரியும் காப்பாளர்கள் / காப்பாளினிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநில அளவில் சிறந்த காப்பாளர்கள் / காப்பாளினிகள் தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசாக ரூ.5,000, இரண்டாம் பரிசாக ரூ.3,000 மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.2,000 வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.0.10 இலட்சம் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**8.3. விடுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள இதர வசதிகள்**

1. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் பொது அறிவினை மேம்படுத்தும் பொருட்டு ஒரு ஆங்கில நாளிதழ் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.
2. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு பன்னிரெண்டாம் வகுப்பு வரை விலையில்லாமல் அனைத்து பாடப்புத்தகங்களும் கல்வித்துறை மூலம் வழங்கப்படுகின்றன.
3. விடுதிகளில் தங்கி 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர் அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றிட ஏதுவாக சிறப்பு வழிகாட்டி நூல்கள் விலையில்லாமல் வழங்கப்படுகின்றன.

4. விடுதிகளில் தங்கி நான்கு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு மதிய உணவு திட்டத்தின் கீழ் பயன் பெறும் மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்படும் சீருடைகளைப் போன்றே அதே நிறத்தில் அதே எண்ணிக்கையிலான நான்கு இணை சீருடைகள் 2013–2014 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன.

5. விடுதிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி, விளையாட்டுச் சாதனங்கள், நீர் சுத்திகரிப்புக்கருவி, புத்தக அலமாரிகள், மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், சுகாதார குட்டைத் தகளி, தீயணைப்பான் கருவிகள், வியாபார ரீதியிலான இட்லி வேகவைப்பான்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி வழங்கப்பட்டுள்ளன. இவற்றுடன் கல்லூரி



விடுதிகளுக்கு இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், இரண்டடுக்கு கட்டில்கள் மற்றும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

6. விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு பாய், போர்வை, எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வழங்கப்படுகின்றன. இவை தவிர, மலைப்பிரதேசங்களில் உள்ள விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை (உல்லன் ஸ்வெட்டர்) வழங்கப்படுகிறது. மேலும் பள்ளி விடுதி மாணவ, மாணவியர் அனைவருக்கும் ஆங்கிலம் – தமிழ் சொல்லகராதி மற்றும் உலக வரைபடப் புத்தகம் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

7. விடுதி மாணவ, மாணவியர் அனைவருக்கும் ஆண்டு தோறும் அவர்களின் உடல்நிலையினைக் கண்காணிக்கும் பொருட்டு மூன்றுக் கட்டங்களாக

மருத்துவப் பரிசோதனை முகாம்கள் நடத்தப்படுகின்றன.

8. விடுதி மாணவ, மாணவியருக்கு வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாத மாணவ, மாணவியருக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

9. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் வாரத்தில் ஒருநாள் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் வாரத்தில் ஒருநாள் கோழி இறைச்சியும் விடுதி மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுகிறது.

10. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி/தேநீர் வழங்கப்படுகிறது.



11. 2013–2014 ஆம் ஆண்டு முதல் மாணவ, மாணவியருக்கு ஆண்டுதோறும் பாய்களும், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை போர்வைகளும் வழங்கப்படுகின்றன.

12. 2014–2015 ஆம் ஆண்டில் விடுதிகளின் நலன் கருதி 14 விடுதிகளுக்கு சமையல் செய்ய நீராவி கொதிகலன்கள் ரூ.28 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

13. கல்லூரி விடுதிகளில் உள்ள நூலகங்களை பராமரிக்க ஏதுவாக 2014–2015 ஆம் ஆண்டில் 67 கல்லூரி விடுதிகளுக்கு இரும்பு புத்தக அலமாரிகள் ரூ.7.91 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

14. சொந்த கட்டடத்தில் இயங்கும் 15 மாணவியர் விடுதிகளுக்கு அவர்களது பாதுகாப்பு நலன் கருதி சுற்றுச் சுவர் கட்ட ரூ.141.41 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

15. 2014–2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கி பயிலும் மாணவ / மாணவியருக்கு தலையணைகள் ரூ.162.13 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

16. 2014–2015 ஆம் ஆண்டில் 500 விடுதிகளுக்கு பழைய பாத்திரங்களுக்கு பதிலாக புதிய பாத்திரங்கள் ரூ.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

17. 2014–2015 ஆம் ஆண்டு முதல் விடுதிகளில் ஏற்படும் அவசர பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள



ஏதுவாக காப்பாளர் / காப்பாளினிகளுக்கு முன்பணமாக ரூ.15,000 வழங்க அதிகாரம் அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

18. விடுதிகளில் தரமான மற்றும் சுகாதாரமுறையில் உணவு தயாரிக்க சமையலர்களுக்கு புத்தாக்க பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 9. <u>விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல்</u>

இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் புதிதாக திறக்க உத்தரவிடப்பட்ட 10 கல்லூரி விடுதிகளையும் சேர்த்து மொத்தம் 1,315 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 1,130 விடுதிகள் அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 185 விடுதிகள் தனியார் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றில் 2014–2015 ஆம் ஆண்டில் கட்டடம்

கட்ட உத்தரவிடப்பட்ட 10 விடுதிகளையும் சேர்த்து மொத்தம் 173 விடுதிகளுக்கு பொதுப்பணித்துறை மூலம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன.

மேலும், புதிதாகக் கட்டப்பட்டு வரும் விடுதிக் கட்டடங்களில் சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் கருவி மற்றும் சூரிய ஒளி மூலம் நீரை சூடாக்கும் கருவி ஆகியன பொருத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் விடுதிகளுக்குக் கட்டடம் கட்ட ரூ.6,246.60 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.2,757.04 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு



ரூ.3,098.63 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.5,855.67 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9.1. <u>விடுதி கட்டடங்களுக்கான பராமரிப்பு</u>**

2013–2014 ஆம் ஆண்டில் அரசு கட்டடத்தில் இயங்கிவரும் விடுதிகளின் சிறப்பு பராமரிப்பு செலவிற்காக ஒரு முறை ஒதுக்கீடாக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு சிறப்பு பராமரிப்புப் பணிகள் பொதுப்பணித்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

**10. <u>அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்</u>**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.50,000–க்கு மிகாமலிருந்து அவர்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்கி பயிலும்

நிலையில் அவர்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. மாதம் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.650 வீதம் 10 மாதங்களுக்கு உணவு மானியத்தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 1,426 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.92.74 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/ சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 772 | 654 | 1,426 | 50.21 | 42.53 | 92.74 |

இத்திட்டத்திற்கு 2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.72.22 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு



ரூ.54.41 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.126.63 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

பிரமலை கள்ளர் வகுப்பினரின் கல்வி நிலையினை மேம்படுத்தும் பொருட்டு, அவ்வகுப்பினர் பெருமளவில் வாழும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 290 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் (212 தொடக்கப் பள்ளிகள், 23 நடுநிலைப்பள்ளிகள், 22 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 33 மேல்நிலைப்பள்ளிகள்) இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் 30,538 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் பொதுப்பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்குவது போன்று சிறப்பு ஊக்கத்

தொகை, விலையில்லா காலணி, மடிக்கணினி, புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி (ஜியாமெட்ரி பாக்ஸ்), வண்ணப் பென்சில்கள் மற்றும் உலக வரைபடப் புத்தகம் ஆகியன பள்ளிக் கல்வித் துறையின் மூலம் வழங்கப்படுகின்றன.

2011–2012 ஆம் ஆண்டில் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 5 பள்ளிகள் வீதம் 15 ஆரம்பப்பள்ளிகளில் புதியதாக ஆங்கில வழி மழலையர் வகுப்புகள் (LKG) தொடங்கப்பட்டன. தற்போது அப்பள்ளிகளில் UKG, முதல் மற்றும் இரண்டாம் வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புகளில் 300 மாணவர்கள் மற்றும் 305 மாணவிகள் என மொத்தம் 605 மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

2014–2015 ஆம் கல்வியாண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் படித்து தேர்ச்சி



அடைந்த மாணவ, மாணவியரின் விழுக்காடு முறையே 88.7% மற்றும் 87.9% ஆகும்.

2014–2015 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்காக ரூ.6,999.28 இலட்சம் செலவிடப்பட்டது.

2015–2016 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்கு ரூ.8,569.61 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 11.1. கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரிடையே அதிக மதிப்பெண்கள் பெறும் உணர்வினை ஊக்குவிக்கும் நோக்கத்தில் பரிசுகள் வழங்கும் திட்டம் 1995 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்

வழங்கப்பட்டு வரும் பரிசு தொகை 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் உயர்த்தப்பட்டு 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியருக்கு முறையே ரூ.10,000 மற்றும் ரூ.7,000 ஆகவும், மூன்றாம் நிலையில் மதிப்பெண்கள் பெறும் 3 மாணவ, மாணவியருக்கு தலா ரூ.5,000 ஆகவும் வழங்கப்படுகிறது.

**11.2. <u>அதிக தேர்ச்சி பெறச் செய்யும் அரசு கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்</u>**

அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத் தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக



தேர்ச்சி பெறச்செய்யும் உயர்நிலை / மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ.10,000 பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் திட்டம் 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கள்ளர் சீரமைப்பு உயர்நிலை / மேனிலைப் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு பாடப் பிரிவிலும் மாணவ, மாணவியரை 100 விழுக்காடு தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ.5,000 பரிசுத் தொகையாக வழங்கும் திட்டம் 2014–2015 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

**11.3. கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களில் உள்ள பெரும் பழுதுகளை நீக்கிட மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு உயர்த்தி வழங்குதல்**

அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களில் உள்ள பெரும் பழுதுகளை நீக்கிடவும் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் 2011–2012 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2014–2015 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்கள்**

1. 13 அரசு கள்ளர் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.46.40 இலட்சம் செலவில் கணினிகள் மற்றும் உதிரிபாகங்கள் வழங்கப்பட்டுள்ளன.



2. 15 அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.75.75 இலட்சம் செலவில் திறன்மிகு வகுப்பறைகள் அறிமுகப்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**12. சீருடைகள் வழங்குதல்**

**(அ) கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்**

2013–2014 ஆம் ஆண்டு முதல் சமூகநலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படுவது போன்று வண்ணம், வடிவமைப்பு கொண்ட நான்கு இணை சீருடைகள் சமூக நலத்துறை மூலமாகவே கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கும் வழங்கப்படுகின்றன.

**(ஆ) விடுதிகள்**

**2013–2014** ஆம் ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி **10** ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் சீருடையினை அவர்கள் பள்ளி சீருடைகளாக உபயோகிக்கும் வகையில் சீருடைகளின் வண்ணம் மற்றும் வடிவமைப்பில் மாற்றம் செய்யப்பட்டு நான்கு இணை சீருடைகளாக வழங்கப்பட்டு வருகின்றன. சீருடைத் துணிகள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு சமூகநலத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் மாணவ, மாணவியரின் உடலமைப்பிற்கு ஏற்ப தைத்து வழங்கப்படுகின்றன.



**2014–2015** ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் **19,960** மாணவ, மாணவியருக்கும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கி பயிலும் **19,040** மாணவ, மாணவியருக்கும் ஆக மொத்தம் **39,000** மாணவ, மாணவியருக்கு ரூ.**372.27** இலட்சம் செலவில் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு **2015–2016** ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**245.73** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**174.73** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**420.46** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13. பரிசுத் திட்டங்கள்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த மாணவ,

மாணவியர் அதிக மதிப்பெண்கள் பெறுவதை ஊக்குவிக்கும் பொருட்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில மற்றும் மாவட்ட அளவில் பின்வருமாறு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**13.1. <u>மாநில அளவிலான பரிசுகள்</u>**

**<u>12 ஆம் வகுப்பு</u>**

12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் உயர் மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள் தலா ரூ.50,000 என்ற அளவிலும், இதேபோன்று நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.30,000 என்ற அளவிலும், நான்கு மூன்றாம் பரிசுகள் தலா ரூ.20,000 என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.



**<u>10 ஆம் வகுப்பு</u>**

10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் உயர் மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள் தலா ரூ.25,000 என்ற அளவிலும், இதேபோன்று நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.20,000 என்ற அளவிலும், நான்கு மூன்றாம் பரிசுகள் தலா ரூ.15,000 என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.

**13.2. <u>மாவட்ட அளவிலான பரிசுகள்</u>**

**<u>12 ஆம் வகுப்பு</u>**

12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் உயர் மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள் தலா ரூ.6,000 என்ற அளவிலும், இதேபோன்று நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.4,000 என்ற அளவிலும், நான்கு மூன்றாம் பரிசுகள் தலா ரூ.2,000 என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.

**<u>10 ஆம் வகுப்பு</u>**

10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் உயர் மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர், மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பு மாணவர் ஒருவர், மாணவி ஒருவர் என நான்கு முதல் பரிசுகள் தலா ரூ.3,000 என்ற அளவிலும், இதேபோன்று நான்கு இரண்டாம் பரிசுகள் தலா ரூ.2,000 என்ற அளவிலும், நான்கு மூன்றாம்



பரிசுகள் தலா ரூ.1,000 என்ற அளவிலும் வழங்கப்படுகின்றன.

இத்திட்டங்களின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 1,282 மாணவ, மாணவியருக்கு ரூ.39.57 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/ சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 729 | 553 | 1,282 | 17.79 | 21.78 | 39.57 |

இத்திட்டத்திற்கு 2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.21.50 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.22.25 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.43.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14. <u>பேரறிஞர் அண்ணா நினைவு விருது</u>**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவில் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதலாவது மற்றும் இரண்டாவது மதிப்பெண்கள் பெற்று தொழிற்படிப்புப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கும் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கும் வருடம் ஒன்றுக்கு ரூ.10,000 வீதம் 4/5 ஆண்டுகளுக்கு பேரறிஞர் அண்ணா நினைவு விருது வழங்கப்படுகிறது.



இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 1,236 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.123.60 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/ சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 647 | 589 | 1,236 | 64.70 | 58.90 | 123.60 |

இத்திட்டத்திற்கு 2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.60 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.60 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.120 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**15. <u>தந்தை பெரியார் நினைவு விருது</u>**

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளில் பட்டயப்படிப்பில் சேர்ந்து பயிலும்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியரில் 10 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கும் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கும் ஆண்டொன்றுக்கு ரூ.10,000 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு தந்தை பெரியார் நினைவு விருது வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 788 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.78.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ /சீம | மொத்தம் | பிவ | மிபிவ /சீம | மொத்தம் |
| **408** | **380** | **788** | **40.80** | **38.00** | **78.80** |

இத்திட்டத்திற்கு **2015–2016** ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.42 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.45 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.87 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 16. <u>முதலமைச்சரின் தகுதி பரிசுத் திட்டம்</u>

2012–2013 ஆம் ஆண்டு முதல் 12 ஆம் வகுப்பில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் முதலமைச்சரின் தகுதி பரிசுத்திட்டம் என்ற

புதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெறும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் / சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த முதல் 500 மாணவர்களுக்கும் மற்றும் 500 மாணவியர்களுக்கும் (மொத்தம் 1,000 மாணவ, மாணவியர்கள்) அவர்கள் பட்டப்படிப்பு / பட்டயப் படிப்பு / தொழிற்படிப்பு முடிக்கும் காலம்வரை ஆண்டொன்றுக்கு ரூ.3,000 வீதம் அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2014–2015 ஆம் ஆண்டில் ரூ.93.90 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.126.39 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 17. சிறந்த தனியார் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயில்வதற்கு நிதியுதவி வழங்குதல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசுப் பள்ளிகளில் படித்து 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் 10 மாணவ, மாணவியர் (பிற்படுத்தப்பட்டோர் வகுப்புகளிலிருந்து மூன்று மாணவர்கள், மூன்று மாணவிகள் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் வகுப்புகளிலிருந்து இரண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு மாணவிகள்) தங்கள் விருப்பப்படி தமிழகத்தில் உள்ள சிறந்த தனியார் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி பயில நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ.1,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு உயரளவாக

ரூ.28,000 வீதம் இரண்டாண்டுகளுக்கு ரூ.56,000 நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 638 மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.149.51 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/ சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 383 | 255 | 638 | 90.87 | 58.64 | 149.51 |

இத்திட்டத்திற்கு 2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.107.52 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.67.20 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.174.72 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**18. <u>மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்</u>**

அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதியில் தங்கியுள்ளோர் மற்றும் உண்டி உறைவிடப்பள்ளி மாணவ, மாணவியர் விலையில்லா மிதிவண்டிகள் பெறத் தகுதியற்றவர் ஆவர்.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 4,23,846 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவ, மாணவியர் பயனடைந்த வகையில் ரூ.14,882.24 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

| பயனடைந்த மாணவ/மாணவியர் எண்ணிக்கை | | | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ /சீம | மொத்தம் | பிவ | மிபிவ /சீம | மொத்தம் |
| 2,34,919 | 1,88,927 | 4,23,846 | 8,390.03 | 6,492.21 | 14,882.24 |

இத்திட்டத்தின் கீழ் **2015–2016** ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.**8,542.87** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.**6,693.19** இலட்சமும் ஆக மொத்தம் ரூ.**15,236.06** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **2015–2016** ஆம் ஆண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **15.07.2015** அன்று துவக்கப்பட்டது.



### 18.1. இணையதளம் மூலம் மிதிவண்டிகள் வழங்குதலைக் கண்காணித்தல்

அரசு, இயக்குநரகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் உரிய காலத்தில் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையிலும், மிதிவண்டிகள் விநியோகம் செய்யப்படாத இனங்களை துரிதப்படுத்தி, மிதிவண்டிகளை உடன் வழங்க ஏதுவாக மென்பொருள் உருவாக்கப்பட்டு மிதிவண்டிகள் விநியோகம் குறித்த விவரங்கள் இணையதளம் (www.agaram.tn.gov.in/freecycles) வாயிலாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

### 19. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார

மேம்பாட்டிற்காக விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் விலையில்லா சலவைப்பெட்டிகள் வழங்கப்படுகின்றன.

**19.1. <u>தையல் இயந்திரங்கள் வழங்குதல்</u>**

ஏழ்மை நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளது ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.40,000–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்த வரை ரூ.60,000–க்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

2014–2015 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 1,159 பயனாளிகளுக்கும் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த



1,240 பயனாளிகளுக்கும் ஆக மொத்தம் 2,399 தையல் இயந்திரங்கள் ரூ.82.79 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

இத்திட்டத்திற்கு 2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.40 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.42.80 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.82.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**19.2. <u>சலவைப் பெட்டிகள் வழங்குதல்</u>**

சலவைத் தொழில் செய்யும் ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த விலையில்லா சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளது ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைப்

பொறுத்தவரை ரூ.40,000—க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.60,000—க்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2014—2015 ஆம் ஆண்டில் 1,868 பயனாளிகளுக்கு சலவைப் பெட்டிகள் ரூ.85 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு 2015—2016 ஆம் ஆண்டில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.85 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**19.3. திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டங்கள்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த இளைஞர்கள் தங்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாகவும், சுயதொழில் மூலம் வருமானம் ஈட்டக் கூடிய வகையில் தங்களது திறனை வளர்த்துக்



கொள்ள ஏதுவாகவும் மைய / மாநில அரசுப் பயிற்சி நிறுவனங்கள் மூலம் பல்வேறு வேலைவாய்ப்பு மிக்க பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இப்பயிற்சிக்கான கட்டணத் தொகை முழுவதையும் அரசே ஏற்கிறது. 2012—2013 ஆம் ஆண்டு முதல் அனைத்து துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் குழுமத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**20. வீட்டுமனைகள் வழங்குதல்**

வீடற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்—பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு வீட்டு மனைகள் விலையேதுமின்றி வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளது ஆண்டு வருமானம் கிராமப்புறங்களைப் பொறுத்தவரை

ரூ.40,000–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை ரூ.60,000–க்கு மிகாமலும் இருக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2,20,634 வீட்டுமனைப் பட்டாக்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 338 பயனாளிகளுக்கு ரூ.56.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு 2015–2016 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ.200 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ.150 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.350 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 21. <u>தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்</u>

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தவரின் பொருளாதார முன்னேற்றத்திற்காக இம்மக்கள் சிறு தொழில்கள், வியாபாரம் துவங்க குறைந்த வட்டியில் கடனுதவி வழங்கிவருகிறது. 1982 ஆம் ஆண்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டது.

1993–1994 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் முகவராக பணியாற்றி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு கடன்திட்டங்களின் கீழ் கடன் தொகை

வழங்க தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் நிதி உதவி செய்து வருகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், தனிநபர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு, துணை முகவர்களாக செயல்படும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் / நகர கூட்டுறவு வங்கிகள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் / தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கழகம் (ஆவின்) / தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி / தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் மூலம் கடன் தொகை வழங்கி வருகிறது.

1993–1994 ஆம் ஆண்டு முதல் இதுவரை இக்கழகத்திற்கு, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் ரூ.41,455.97 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை 3,75,134 பயனாளிகளுக்கு



ரூ.43,978.61 இலட்சம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்களிப்புடன் வழங்கப்பட்டுள்ளது.

**21.1. <u>பொது காலக்கடன் திட்டம்</u>**

இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூபாய் 10 இலட்சம் வரை கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ.5 இலட்சம் வரை 6 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்திலும், ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரை 8 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்திலும் கடனுதவி வழங்கப்படுகிறது. கடன் தொகை திரும்ப செலுத்தும் காலம் 3 / 5 ஆண்டுகள்.

**21.2. <u>பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்</u>**

பெண்களின் சுயசார்பு நிலையினை தொடர்ந்து வலியுறுத்தும் நோக்குடன் இத்திட்டம்

செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூபாய் ஒரு இலட்சம் வரை 5 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடன் தொகை திரும்ப செலுத்தும் காலம் 3 / 5 ஆண்டுகள்.

**21.3. மகிளா சம்ரிதி யோஜனா**

இத்திட்டம் மகளிர் தொழில் முனைவோர்க்கு சிறுகடன் வழங்கும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுக்களாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு 'சிறுகடன்' வழங்கப்படுகிறது. ஒரு சுய உதவிக் குழுவில் அனுமதிக்கப்படும் அதிகபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை 20. இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்



ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.50,000 கடனுதவி வழங்கப்படுகிறது. கடன் தொகை ஆண்டிற்கு 4 விழுக்காடு வட்டியுடன், 3 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

**21.4. சிறு கடன் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் ஆண்கள் சுய உதவிக்குழுக்களின் உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுக்களாகவோ சிறு தொழில்/வணிகம் செய்வதற்கு 'சிறுகடன்' வழங்கப்படுகிறது. ஒரு சுய உதவிக்குழுவில் அனுமதிக்கப்படும் அதிகபட்ச உறுப்பினர்கள் எண்ணிக்கை 20. இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ.50,000 கடனுதவி வழங்கப்படுகிறது. கடன் தொகை ஆண்டிற்கு 5 விழுக்காடு வட்டியுடன், 3 ஆண்டுகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

**21.5. புதிய கடன் திட்டங்கள்**

2012–2013 ஆம் ஆண்டு முதல் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் புதிய கடன் திட்டங்களாக சிறு விவசாயிகள் மற்றும் காய்கறிகள் பயிரிடுவோருக்கான சிறு கடன் திட்டம், மரபுசார் கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கான சுய தொழில் காலக் கடன் திட்டம், இளம் தொழிற் பட்டதாரிக்கான காலக் கடன் திட்டம் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் கடன் திட்டங்களின் கீழ் கடனுதவி பெற நிர்ணயிக்கப்பட்டிருந்த அதிகபட்ச குடும்ப ஆண்டு வருமான வரம்பினை 29.07.2015 முதல் கிராமப்புறங்களில் ரூ.81,000–லிருந்து ரூ.98,000–ஆகவும், நகர்ப்புறங்களில் ரூ.1,03,000–லிருந்து ரூ.1,20,000–ஆகவும் உயர்த்தி மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மாநில அரசின் முகவராக



செயல்படுவதால், இந்நிறுவனம் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சி கழகம் நிர்ணயித்துள்ள நிதி பங்களிப்பு முறை, வட்டி விகிதம் மற்றும் ஆண்டு வருமான வரம்பினை பின்பற்றுகிறது.

இந்நிறுவனம் 2014–2015 ஆம் ஆண்டில் இதுவரை மகிளா சம்ரிதி யோஜனா மற்றும் சிறு வணிகக் கடன் திட்டங்களின் கீழ் 18,640 பயனாளிகளுக்கு ரூ.5,536.11 இலட்சமும், பொதுக்கடன் திட்டத்தின் கீழ், ஆவின் நிறுவனம் மூலம், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களின் 134 உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்காக ரூ.38.19 இலட்சமும், இதர சுயதொழில்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் 236 பயனாளிகளுக்கு ரூ.156.40 இலட்சமும், மகளிர் புதிய பொற்கால திட்டத்தின்கீழ் 141 பயனாளிகளுக்கு ரூ.78.50 இலட்சமும் ஆக மொத்தம் 19,151 பயனாளிகளுக்கு

ரூ.5,809.20 இலட்சம் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத்தின் பங்களிப்புடன் கடன் உதவி வழங்கியுள்ளது.

2015–2016 ஆம் ஆண்டில் சுமார் 40,000 பயனாளிகள், பயனடையும் வகையில் ரூ.75 கோடி அளவில் பல்வேறு கடன் திட்டங்களின் கீழ் கடனுதவி வழங்க இந்நிறுவனம் உத்தேசித்துள்ளது. அதற்கேற்றவாறு நிதியுதவி பெறுவதற்கான ‘‘ஆண்டு செயலாக்கத்திட்டம்'' தயாரிக்கப்பட்டு புதுடில்லியிலுள்ள, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**21.6. <u>தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத்திற்கு அலுவலக கட்டடம் கட்டுதல்</u>**

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு சொந்த அலுவலக கட்டடம் கட்ட



எழும்பூர் வட்டத்தில், சர்வே எண்.465/10 (பகுதி) பிளாக் எண்.29–ல், மூன்று கிரவுண்ட் மற்றும் 154 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம், நில கிரயமின்றி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு வழங்கப்படும் எனவும் அந்நிலத்தில் ரூ.400 இலட்சம் மதிப்பீட்டில் அலுவலக கட்டடம் கட்டப்படும் எனவும் அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து வருவாய் துறையால் மேற்குறிப்பிட்ட நிலத்தை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத்திற்கு மாற்றம் செய்ய அரசாணை வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து இக்கழகத்திற்கு நிலம் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகம், சென்னை மூலம் இந்நிறுவனத்திற்கு சொந்த கட்டடம் கட்ட ஆணையிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 21.7. சிறு, குறு விவசாயிகளுக்கான மானியம் மற்றும் கடன் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகள் புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்து நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடன் பெறும் பயனாளிகளை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்டக் கூர்ந்தாய்வுக் குழு தேர்வு செய்கிறது. தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் / தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் உயர் அளவாக ரூ.1,00,000 வரை 50 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சம் ரூ.50,000 அரசு மானியமாக வழங்கப்படுகிறது. இதுவரை



2,107 சிறு, குறு விவசாயிகள் ரூ.948.81 இலட்சம் அரசு மானியமாகப் பெற்று பயனடைந்துள்ளனர்.

## 22. சீர்மரபினர் நல வாரியம்

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக அரசு செயல்படுத்தும் பல்வேறு நலத்திட்டங்களின் பயன்கள் அவர்களுக்குச் சென்றடைவதை உறுதிசெய்யும் பொருட்டு ‘‘சீர்மரபினர் நல வாரியம்’’ அமைக்கப்பட்டுள்ளது. அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறைக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித்திட்டங்கள் போன்று சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு ‘‘விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு

உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம்'' ஆகிய நலத்திட்டங்களின் கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது. 31.03.2015 வரை இவ்வாரியத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு ரூ.40.78 இலட்சம் அளவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.200 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்</u>**

| | | | |
|---|---|---|---|
| **1.** | **விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்** | | |
| | அ) | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ.1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.15,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | ரூ.2,000 |



| | | | |
|---|---|---|---|
| **4.** | **கல்வி உதவித்தொகை** | | |
| | அ) | 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | இ) | 11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஈ) | 12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,500 |
| | உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,500 |
| | ஊ) | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,500 |
| | | (ii)மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | எ) | (i) முறையான பட்டமேற்படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii)மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டமேற்படிப்பிற்கு | ரூ.5,000 |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.6,000 |
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | | (ii)மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.8,000 |
| | ஒ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,000 |

| | | | |
|---|---|---|---|
| | | (ii)மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5 | | திருமண உதவித்தொகை | ரூ.2,000 |
| **6. மகப்பேறு உதவித்தொகை** | | | |
| | அ) | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6,000 |
| | ஆ) | கருச்சிதைவு /கருக்கலைப்பு | ரூ.3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.1,000 |

**23. <u>தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்</u>**

நரிக்குறவர்களுக்கு கல்வி, மாற்றுத் தொழில் புரிவதற்கான உதவி மற்றும் அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்காகவும், இத்திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்து நரிக்குறவர்களின் மேம்பாட்டினை உறுதி செய்யவும் ‘‘தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்’’ இயங்கி வருகிறது.



அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிவரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித்திட்டங்கள் போன்று நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு ‘‘விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம்’’ ஆகிய நலத்திட்டங்களின் கீழ் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

நரிக்குறவர்கள் தனியாகவோ, கூட்டாகவோ சுயதொழில் தொடங்கி தங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் தனிநபர் தொழில் துவங்குவதற்காக ரூ.7,500 மானியமாகவும், கூட்டாகத் தொழில் தொடங்குவதற்கு அதிகபட்ச மானியமாக

ரூ.1,25,000 பின்நிகழ்வாக (Back ended subsidy) வழங்கப்படுகிறது.

**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| | | | |
|---|---|---|---|
| **1. விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்** | | | |
| | அ | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ.1,00,000 |
| | ஆ | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.15,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | ரூ.2,000 |
| **4. கல்வி உதவித்தொகை** | | | |
| | அ | ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | ரூ.500 |
| | ஆ | 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | ரூ.1,000 |
| | இ | 10 ஆம்வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |



| | | | |
|---|---|---|---|
| | ஈ | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | உ | 11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,000 |
| | ஊ | 12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | ரூ.1,500 |
| | எ | 12 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | ரூ.1,500 |
| | ஏ | (i)முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,500 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | ஐ | (i) முறையான பட்டமேற்படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டமேற்படிப்பிற்கு | ரூ.5,000 |
| | ஒ | (i) தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.4,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | ரூ.6,000 |
| | ஓ | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.8,000 |
| | ஔ | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,000 |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற்பயிற்சிப் படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5 | | திருமண உதவித்தொகை | ரூ.2,000 |
| 6 | | **மகப்பேறு உதவித்தொகை** | |
| | அ | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் 6 மாதங்களுக்கு | ரூ.6,000 |
| | ஆ | கருச்சிதைவு/கருக்கலைப்பு | ரூ.3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | ரூ.500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.1,000 |
| 9 | | **தொழில் தொடங்க மானியம்** | |
| | அ | தனிநபர் தொழில் தொடங்க முழுமானியம் | ரூ.7,500 |
| | ஆ | குழுவாகத் தொழில் தொடங்க மானியம் | ரூ.10,000 தனிநபருக்கு (அல்லது) ரூ.1,25,000 அதிகபட்ச–மாக குழுவிற்கு |

31.03.2015 வரை இவ்வாரியத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு ரூ.575.46 இலட்சம்



அளவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ.640 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2015–2016 ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**24. <u>வன்னியர் பொதுச் சொத்து நல வாரியம்</u>**

தமிழகத்தில், வன்னியர் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, அவைகளை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தின் பலன்கள் முழுவதும் உரியவர்களுக்குச் செல்வதற்கான வழிவகைகளைக் காண்பதற்காக, வன்னியர் பொதுச் சொத்து நலவாரியம் செயல்பட்டு வருகிறது. இதுவரை இம்மாநிலத்தில் 18 மாவட்டங்களில் உள்ள 79 வன்னியர் பொதுச்

சொத்துக்கள் / அறக்கட்டளைகள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**25. <u>தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்</u>**

இந்திரா சஹானி மற்றும் பிறர் – எதிர் – இந்திய யூனியன் மற்றும் பிறர் (J.T. 1992 (6) SC 273) என்கிற மண்டல் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு 16(4)ன் கீழ், கூறு 340 உடன் படிக்கப்பட்டு, ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, 15.3.1993 அன்று முதல் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை–சார்புடைய (quasi-judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல்–வரம்புகளாவன:-



(i) பிற்படுத்தப்பட்டோர்/ மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாகச் சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்கும்;

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்யும்;

(iii) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கூறு 16(4) மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக

உச்சநீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமையவேண்டும்;

(iv) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வுசெய்து பரிந்துரை வழங்கும்.

இவ்வாணையம் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் 8 உறுப்பினர்களுடன் 28.12.2012 முதல் 3 ஆண்டுகள் பதவிக்காலத்துடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

**26. <u>சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது</u>**

தமிழ்நாட்டில் சமூக நீதிக்காகப் போராடியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது 1994 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு,



1995 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு வழங்கப்படுகிறது. இவ்விருது ஒரு சவரன் தங்கப் பதக்கமும், ரூ.1 இலட்சம் பொற்கிழியும் கொண்டதாகும். 2014 ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது டாக்டர் தாவுஜி குப்தா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**27. <u>சிறுபான்மையினர் நலன்</u>**

சிறுபான்மையினர் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு திட்டங்களை தீட்டுவதிலும், செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. சமுதாயத்தில் பல்வேறு பிரிவினரிடையே மத நல்லிணக்கத்தை பேணுவதற்கு இவ்வரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

**28. <u>தனி இடஒதுக்கீடு</u>**

பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர்களுக்கான 30 விழுக்காடு இட ஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட இஸ்லாமியர்களுக்கென 3.5 விழுக்காடு தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**29. <u>கல்வி உதவித் தொகை</u>**

அரசு, அரசு உதவிபெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களிலும் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் கிறித்தவ, இஸ்லாமிய, சீக்கிய, புத்த, பார்சி மற்றும் ஜெயின் மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கு மைய அரசின் கீழ்க்கண்ட கல்வி உதவித் தொகை திட்டங்களை இவ்வரசு தொடர்ந்து செவ்வனே செயல்படுத்தி வருகிறது.

1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்



2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டம்
3. தகுதி (ம) வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டம்

பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு, பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு ரூ.1 இலட்சத்திற்கு மிகாமலும், பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு ரூ.2 இலட்சத்திற்கு மிகாமலும், தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும். முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்கும் மாணவ / மாணவியர்கள் இத்திட்டங்களின் கீழ் பயன்பெறுவர்.

இத்திட்டங்களின் கீழ் மொத்த பயனாளிகளில் 30 விழுக்காடு மாணவியர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்படும்.

## 29.1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்கு மைய அரசுகளின் நிதி பங்களிப்புகளுடன் 100 சதவீதம் இக்கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 6ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு சேர்க்கை கட்டணம் ரூ.500 வரையிலும், கற்பிப்புக் கட்டணம் ரூ.3,500 வரையிலும் வழங்கப்படுகிறது. தவிர, பராமரிப்பு கட்டணமாக, 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு மாதம் ரூ.100 வீதமும், 6ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மாதம் ரூ.600 வீதமும், ஒரு ஆண்டில் அதிகபட்சமாக 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.



இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 4,61,376 மாணவ / மாணவியருக்கு ரூ.71.97 கோடி கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2015–2016 ஆம் ஆண்டிற்கு ரூ.63.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 29.2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

பதினோறாம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு மைய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் இக்கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பாடப்பிரிவிற்கு ஏற்றவாறு சேர்க்கை மற்றும் கற்பிப்புக் கட்டணத்திற்காக ரூ.3,000 முதல் ரூ.10,000 வரையிலும், பராமரிப்புக் கட்டணத்திற்காக விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ரூ.3,800 முதல் ரூ.12,000 வரையிலும், விடுதியில் தங்காமல்

பயில்பவர்களுக்கு ரூ.2,300 முதல் ரூ.5,500 வரையிலும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 73,699 மாணவ / மாணவியருக்கு ரூ.43.29 கோடி கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டிலிருந்து கல்வி உதவித் தொகை பட்டுவாடாவில் ஏற்படும் தாமதத்தை தவிர்க்க கல்வி உதவித்தொகை மைய அரசால் நேரடியாக (Direct Benefit Transfer) மாணவ / மாணவியர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக அனுப்பப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2015–2016 ஆம் ஆண்டிற்கு ரூ.30.19 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 29.3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் அதிக அளவில் மதிப்பெண்கள் பெற்று கல்வி பயிலுவதை ஊக்குவிக்கும் நோக்கில் மைய அரசின் 100 சதவீத நிதியுதவியுடன் இக்கல்வி உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்லூரிகளில் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அவர்கள் உண்மையிலே செலுத்தும் கல்விக் கட்டணம் அல்லது ரூ.20,000 இவற்றில் எது குறைவோ அத்தொகை மீள வழங்கப்படும். மேலும், பராமரிப்புக் கட்டணமாக விடுதியில் தங்கி

பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.10,000–மும், விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ.5,000–மும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 6,247 மாணவ / மாணவியருக்கு ரூ.17.13 கோடி கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2014–2015 ஆம் ஆண்டிலிருந்து கல்வி உதவித் தொகை பட்டுவாடாவில் ஏற்படும் தாமதத்தை தவிர்க்க கல்வி உதவித்தொகை மைய அரசால் நேரடியாக (Direct Benefit Transfer) மாணவ / மாணவியர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக அனுப்பப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக 2015–2016 ஆம் ஆண்டிற்கு ரூ.12.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 30. சிறுபான்மையினர் விடுதிகள்

சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த பள்ளி / கல்லூரிகளில் பயிலும் மாணவியர்கள் / மாணவர்கள் பயன்பெறும் வகையில் எவ்விதக் கட்டணமும் இன்றி உணவு மற்றும் உறைவிட வசதிகளுடன் வேலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், கோயம்புத்தூர், மதுரை, கிருஷ்ணகிரி திருநெல்வேலி, தஞ்சாவூர், கன்னியாகுமரி, சென்னை மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 14 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

இம்மாணவ, மாணவியர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் சிறப்பு வழிகாட்டிகள், கணினிகள், பாடக்குறிப்பு புத்தகங்கள், நூலக வசதிகள், விளையாட்டுச் சாமான்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் சுகாதார குட்டை தகளிகள் ஆகியன வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பள்ளி / கல்லூரி மாணவ, மாணவியருக்கும்

மாதாந்திர உணவுக் கட்டணமாக தலா ரூ.755 மற்றும் ரூ.875 முறையே செலவிடப்படுகின்றன.

வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் சிறுபான்மையினர் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசாணைகள் வழங்கப்பட்டு தகுதி வாய்ந்த நிலங்கள் பொதுப் பணித்துறை வசம் ஒப்படைக்கப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட விடுதிகளின் பராமரிப்புக்காக 2014–2015 ஆம் ஆண்டில் ரூ.175.18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2015–2016 ஆம் ஆண்டிற்கு ரூ.193.82 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**30.1. <u>சிறுபான்மையினர் விடுதி மாணவ / மாணவியருக்கு பரிசுகள் வழங்குதல்</u>**

சிறுபான்மையின மாணவ / மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயின்று 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு



பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் சிறுபான்மையின மாணவியருக்கு முதல் பரிசாக ரூ.10,000–மும், இரண்டாம் பரிசாக ரூ.7,000–மும் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.5,000–மும் வழங்கும் திட்டம் 2014–2015 ஆம் கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

**31. <u>சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கான பரிசுகள் வழங்கும் திட்டம்</u>**

சிறுபான்மையின மாணவ, மாணவியர்களின் கல்வி கற்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் 10 மற்றும் 12 ஆம் வகுப்புக்கான அரசு பொதுத் தேர்வுகளில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுத் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**31.1. மாநில அளவிலான பரிசுகள்**

மாநில அளவில், 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் முறையே ரூ.50,000, ரூ.30,000 மற்றும் ரூ.20,000 வழங்கப்படுகின்றன. 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் முறையே ரூ.25,000, ரூ.20,000 மற்றும் ரூ.15,000 வழங்கப்படுகின்றன.

**31.2. மாவட்ட அளவிலான பரிசுகள்**

மாவட்ட அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும், 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும்



சிறுபான்மையினத்தைச் சார்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் முறையே ரூ.6,000, ரூ.4,000, ரூ.2,000–மும், அதே போன்று 10 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர்மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு பரிசுகள் முறையே ரூ.3,000, ரூ.2,000, ரூ.1,000 வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் மாவட்ட மற்றும் மாநில அளவில் 506 சிறுபான்மையின மாணவ, மாணவியர்கள் பயனடையும் வகையில் ரூ.17.01 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.17.76 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 32. உருது மொழி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கான பரிசுத்திட்டம்

மாநில அளவில் உருதுமொழியினை முதல் அல்லது இரண்டாம் மொழியாக பயின்று 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில், முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு உருது மொழி பரிசுகள் முறையே ரூ.15,000, ரூ.10,000 மற்றும் ரூ.5,000 ஆகவும், 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைகளில் உயர் மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு முறையே ரூ.10,000, ரூ.5,000 மற்றும் ரூ.3,000 ஆகவும் பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன.



இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 16 சிறுபான்மையின மாணவ / மாணவியர்கள் பயனடையும் வகையில் ரூ.1.26 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.0.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 33. முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம்

இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற கணவரால் கைவிடப்பட்ட மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழி தலைவராக கொண்டு மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப 2011–2012 ஆம் ஆண்டு வரை 1 : 1 என்ற விகிதாச்சாரத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சம் வரை இணைமானியத்

தொகை அரசால் வழங்கப்பட்டு வந்தது. இந்த இணைமானியத் தொகை 2012–2013 ஆம் ஆண்டு முதல் இரு மடங்காக உயர்த்தப்பட்டு 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் ஆண்டிற்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லீம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லீம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில், தையல் பூ–வேலைப்பாடுகள், காலணிகள், கைவினைப் பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

2014–2015 ஆம் ஆண்டில் அரசின் இணை மானியமாக ரூ.162.97 இலட்சம் இச்சங்கங்களுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது.



இத்திட்டத்திற்காக 2015–2016 ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 34. <u>பாரதப்பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்</u>

சிறுபான்மையினரின் மக்கட்தொகைக்கேற்ப பொருளாதார மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் நியாயமான பங்கு சிறுபான்மையின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் நம் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபான்மையின மக்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட சேவைகளின் பயன், வேலைவாய்ப்புகள், கல்வி உதவித்தொகை வழங்குதல், சுய வேலை வாய்ப்புத் திட்டம், தொழில் நுட்பப் பயிற்சிகள் மூலம் திறனை மேம்படுத்துதல், மாநில மற்றும் மைய அரசின் கீழ் வேலைவாய்ப்பு, சிறுபான்மையினர் வசிக்கும் குடிசைப்

பகுதிகளின் நிலையை மேம்படச் செய்தல், இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு உதவி வழங்குதல், இனக்கலவரங்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் சீரிய நோக்கங்கள் ஆகும்.

இத்திட்டம் முறையாக செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**35. <u>மறுவாழ்வு நிதி உதவித் திட்டம்</u>**

இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக சிறை சென்று விடுவிக்கப்பட்ட சிறுபான்மையினத்தைச் சார்ந்தவர்கள் சமுதாய நோக்கர்களின் பார்வையில் கண்ணியத்துடன் வாழ்க்கை



நடத்துவதற்காக சிறுவணிகம் செய்து மறுவாழ்வு பெற நிதி உதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு ரூ.10,000 வரை நிதி உதவி வழங்கப்படுகிறது.

**36. <u>உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் நல வாரியம்</u>**

இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள், மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் தர்க்காக்கள், ஆஷுர்கானாக்கள், அடக்கத்தலங்கள், தைக்காக்கள், முஸ்லீம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களின் பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகள் முன்னேற்றம் அடைவதற்காக உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டு செயல்பட்டுவருகின்றது.

இதுவரை இவ்வாரியத்தில் 13,464 உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாரியத்தின் மூலம் 31.03.2015 வரை 2,611 பயனாளிகளுக்கு ரூ.59.30 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**இவ்வாரியத்தின் மூலம் உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன**

| | வழங்கப்படும் உதவிகள் | உதவித்தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | **விபத்து ஈட்டுறுதித்திட்டத்தின் கீழ்**<br>அ. விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | 1,00,000 |
| | ஆ. விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | 15,000 |
| 3. | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித்தொகை | 2,000 |



| | | |
|---|---|---|
| 4. | **கல்வி உதவித்தொகை** | |
| | அ. 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,000 |
| | ஆ. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000 |
| | இ. 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,000 |
| | ஈ. 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,500 |
| | உ. 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | 1,500 |
| | ஊ. முறையான பட்டப்படிப்பு | 1,500 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பு | 1,750 |
| | எ. முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 5,000 |
| | ஏ. தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 4,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு | 6,000 |

| | | |
|---|---|---|
| | ஐ. தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 8,000 |
| | ஒ. ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,200 |
| 5. | திருமண உதவித்தொகை | 2,000 |
| 6. | மகப்பேறு உதவித்தொகை | |
| | அ. மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் | 6,000 |
| | ஆ. கருச்சிதைவு/கருக்கலைப்பு | 3,000 |
| 7. | கண் கண்ணாடி செலவுத் தொகையை ஈடு செய்தல் | 500 (அதிகபட்சம்) |
| 8. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | 1,000 |

### 37. ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான நிதியுதவி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனிதப் பயணம்



செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 2011–2012 ஆம் ஆண்டில் இவ்வரசால் துவங்கப்பட்டு ஆண்டிற்கு 500 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000 வீதம் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1,968 கிறித்துவர்கள் புனிதப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2015–2016 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 38. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு அமைக்கப்பட்ட சட்டப்பூர்வமான அமைப்பாகும்.

இந்த ஆணையம் சிறுபான்மையினத்தவரைப் பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

தற்போதைய ஆணையம், பேராயர் டாக்டர். எம். பிரகாஷ் அவர்களை தலைவராகக் கொண்டு 6 உறுப்பினர்களுடன் 01.01.2013 முதல் மூன்றாண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.



## 39. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்கள், பார்சியர்கள் மற்றும் ஜெயின் பிரிவைச் சார்ந்த மதவழி சிறுபான்மையின மக்கள் சமூக மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையும்படி பல நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.5 கோடி மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடி ஆகும்.

### 39.1. தனிநபர் காலக்கடன் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் தாங்கள் சுயமாக தொழில் / வியாபாரம் செய்து

தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.81,000–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ரூ.1,03,000–க்கு மிகாமலும் உள்ள சிறுபான்மையினருக்கு கடன் தொகை ரூ.50,000 வரையில் ஆண்டிற்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் ரூ.50,001–லிருந்து ரூ.10 இலட்சம் வரை ஆண்டிற்கு 6 விழுக்காடு என்ற குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்பட்டு வந்தது. தற்போது அதிகபட்ச கடன் தொகை ரூ.20 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆண்டு வருமானம் ரூ.1.03 இலட்சத்திற்கு மேற்பட்டு ரூ.6,00,000 வரையில் உள்ள சிறுபான்மையினருக்கு சுய தொழில் புரிவதற்காக அதிகபட்சம் ரூ.30 இலட்சம் வரையில் ஆண் பயனாளிகளுக்கு ஆண்டிற்கு 8 விழுக்காடு வட்டி



மற்றும் பெண் பயனாளிகளுக்கு 6 விழுக்காடு வட்டியில் கடன் உதவியினை நீட்டித்து புதுடில்லி தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தால் உத்தரவிடப்பட்டு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இக்கடன்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

சிறுபான்மையினர் ஒன்று சேர்ந்து தொழில் வணிகத்துறையின் மூலம் கூட்டுறவு சங்கங்களை அமைத்து அதன் மூலம் ஆட்டோ ரிக்ஷாக்களை வாங்கிட ஆண்டிற்கு 6 விழுக்காடு என்ற வட்டி விகிதத்தில் தாய்கோ வங்கி (TAICO BANK) மூலம் ஆட்டோ கடன் வழங்கப்படுகிறது.

ஆவின் மூலமாக இரண்டு கலப்பினப் பசுக்கள் வாங்குவதற்கு ரூ.50,000 அல்லது இரண்டு உயர்ரக எருமைகள் வாங்குவதற்கு ரூ.70,000 ஆண்டிற்கு

6 விழுக்காடு என்ற வட்டி விகிதத்தில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 713 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.507.32 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**39.2. <u>சுய உதவி குழுக்கள் மூலம் சிறுகடன் திட்டம்</u>**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், சுய உதவி குழுக்களில் அங்கத்தினர்களாகவும் மற்றும் ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.81,000–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ரூ.1,03,000–க்கு மிகாமலும் உள்ள சிறுபான்மையின ஆண் / பெண் அங்கத்தினர்களுக்கு பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு



வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சுய உதவிக் குழுவில் உள்ள நபர் ஒருவருக்கு ரூ.1,00,000 வரை ஆண்டிற்கு 7 விழுக்காடு என்ற குறைந்த வட்டி விகிதத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் சிறுகடன் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது ஆண்டு வருமானம் ரூ.1.03 இலட்சத்திற்கு மேற்பட்டு ரூ.6,00,000 வரையில் உள்ள சிறுபான்மையினருக்கு ரூ.1,50,000 வரை ஆண்களுக்கு ஆண்டிற்கு 10 விழுக்காடு வட்டி விகிதத்திலும் மற்றும் பெண்களுக்கு 8 விழுக்காடு வட்டி விகிதத்திலும் கடனாக வழங்க புதுடில்லி தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தால் உத்தரவிடப்பட்டு கடன்கள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2014–2015 ஆம் ஆண்டில் 7,948 பயனாளிகள் சுய உதவிக் குழுக்கள் மூலம் பயனடையும்

வகையில் ரூ.2,610.92 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**39.3. <u>கல்விக் கடன்</u>**

குறுகிய கால உயர்திறன் வளர்ச்சி கல்வி, தொழிற் கல்வி (இளங்கலை / முதுகலை) பட்டப்படிப்பு, வேலைவாய்ப்புப் பட்டப்படிப்புகள் பயிலும், ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.81,000–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில் ரூ.1.03 இலட்சத்திற்கு மிகாமலும் உள்ள சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் கல்விக் கடன் ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.2 இலட்சத்திலிருந்து தற்போது ரூ.3 இலட்சம் ஆக உயர்த்தப்பட்டு அதிகபட்சம் ரூ.15 இலட்சம் வரை 3 விழுக்காடு என்ற குறைந்த வட்டி விகிதத்தில் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. மேலும், வெளிநாடுகளில் பயிலும் சிறுபான்மை மாணவ / மாணவியருக்கும் ஒரு கல்வி



ஆண்டிற்கு ரூ. 4 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரூ.20 இலட்சம் வரை 3 விழுக்காடு வட்டியில் அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்கு கல்விக் கடன் மேற்குறிப்பிட்ட வருமான வரம்பின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

ஆண்டு வருமானம் ரூ.1.03 இலட்சத்திற்கு மேற்பட்டு ரூ.6,00,000 வரையில் உள்ளவர்களில் இந்தியாவில் தொழிற்கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வியாண்டிற்கு ரூ.4 இலட்சம் வீதம் அதிகபட்சம் ரூ.20 இலட்சம் வரையிலும், வெளிநாட்டில் தொழிற் கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சம் ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரையிலும், ஆண் பயனாளிகளுக்கு ஆண்டிற்கு 8 விழுக்காடு வட்டியிலும் மற்றும் பெண் பயனாளிகளுக்கு ஆண்டிற்கு 5 விழுக்காடு வட்டியிலும் கடன் வழங்கப்படுகிறது.

## 40. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

வக்ஃப் சொத்துக்களை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும், வக்ஃப் தொடர்பான அலுவல்களை நிர்வகிப்பதற்காகவும் 1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மத்திய அரசு சட்டம் 43/1995) இயற்றப்பட்டு 01.01.1996 முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தில் உள்ள அறிவுரைகளின்படி தமிழ்நாடு வக்ஃப் வாரியம் அமைக்கப்பட்டு முறையாக 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. தற்போதைய வாரியம் 13 உறுப்பினர்களுடன் 2012 ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. திரு. அ. தமிழ்மகன் உசேன் அவர்கள் தலைமையில் வாரியம் தற்போது இயங்கி வருகிறது. 2013 ஆம் ஆண்டில், வக்ஃப் சட்டம் 1995–க்கு சில திருத்தங்கள் செய்யப்பட்டு, இதில் வக்ஃப்



சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டல், விற்பனை மற்றும் தானம் செய்வதற்கு தடை விதித்தல், மேலும் அச்சொத்துக்கள் மேம்பாடு அடைய வழி வகுத்தல் போன்ற சில முக்கிய இனங்களில் சிறந்த முறையில் தீர்வு காணும் வகையில் புதிய அம்சங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

வக்ஃப்கள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஏதுவாக 25 மாவட்டங்களில் சார்பு நீதிமன்றங்கள் வக்ஃப் தீர்ப்பாயங்களாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாட்டில் உள்ள வக்ஃப் சொத்துக்களை முழுமையாக அளவை செய்து கணக்கிடுவதற்கு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் தலைமையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**40.1. <u>நிர்வாக மானியம்</u>**

வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் சகாயத் தொகை வருவாயிலிருந்து தமிழ்நாடு வக்ஃப் வாரிய நிர்வாகச் செலவுகளை எதிர்கொள்ள இயலாமல் பற்றாக்குறை ஏற்படுகிறது. தமிழக அரசு இப்பற்றாக்குறையை ஈடு செய்ய நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தமிழக அரசு 2011–2012 ஆம் ஆண்டிலிருந்து நிர்வாக மானியத்தை ரூ.45 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாக உயர்த்தி வழங்கி வருகிறது. 2015–2016 ஆம் ஆண்டுக்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அரசு நிர்வாக மானியமாக 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**40.2. <u>உலமா ஓய்வூதிய திட்டம்</u>**

1981–ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் உலமா ஓய்வூதியத் திட்டத்தின்



கீழ் தமிழ்நாட்டிலுள்ள வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற வறிய நிலையில் உள்ள பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் உலமா ஓய்வூதியம் பெறுவதற்கு 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் தகுதியுள்ளவர்களாவர். 2010–2011 ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தில் பயனாளிகள் எண்ணிக்கை 2,400 ஆக இருந்தது. 2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 2,600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. உலமா ஓய்வூதிய தொகையும் மாதம் ரூ.750–லிருந்து மாதம் ரூ.1,000–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 2015–2016 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.312 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**40.3. <u>மணவிலக்குப் பெற்ற முஸ்லீம் பெண்களுக்கான வாழ்க்கைச் செலவு மானியம்</u>**

முஸ்லீம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம் 1986 பிரிவு 4(2)–ன்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லீம் பெண்களுக்கு நீதிமன்ற தீர்ப்பின்படி தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் வழங்கப்படும் இத்தொகையினை வாரியத்திற்கு மானியமாக அரசு வழங்கி வருகிறது.

**40.4. <u>பெரிய அளவிலான பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம்</u>**

பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களை புனரமைப்பதற்காக தமிழ்நாடு அரசு பெரிய அளவிலான புனரமைப்பு மானியம் வழங்கி வருகிறது.



2015–2016 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கான மானியமாக ரூ.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**40.5. <u>வக்ஃப் நிறுவனங்கள் மேம்பாட்டு நிதி</u>**

2012–2013 ஆம் ஆண்டில் இந்த அரசு புதிதாக "வக்ஃப் நிறுவனங்கள் மேம்பாட்டு நிதி" ஒன்றினை ஆரம்பித்து நன்கொடை வசூலித்து வக்ஃப் நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டடங்களில் பெரும் பழுதுகள் நீக்கவும், சீரமைக்கவும் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிதிக்கு அரசின் மானியமாக 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.3 கோடி வழங்கப்பட்டது.

## 41. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

### குழுவின் அமைப்பு

இந்திய ஹஜ் குழு மற்றும் புதுதில்லி, வெளிவிவகாரத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் ஹஜ் புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் மற்றும் ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் ஹஜ் குழு சட்டம், 2002 (மத்திய சட்டம் எண்.35/2002)–ன்படி மூன்று ஆண்டு காலத்திற்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, மாநில அரசால் அமைக்கப்படுகிறது. தமிழக அரசு தற்போதைய குழுவை குழுவின் செயல் அலுவலருடன் சேர்த்து 16 உறுப்பினர்களுடன் 28.12.2012–ல் திருத்தியமைத்தது. திரு. அ. முஹம்மத்ஜான் அவர்கள் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவர் ஆவார்.



### 41.1. குழுவின் பணிகள்

இக்குழுவின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:–

1. தமிழ்நாட்டைச் சேர்ந்த பயணிகளிடமிருந்து ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களைப் பெறுதல், ஹஜ் பயணத்திற்கான நபர்களை கணினி மென்பொருளைப் பயன்படுத்தி குலுக்கல் முறையில் தேர்வு செய்தல்.

2. இந்திய ஹஜ் குழு, மும்பைக்கு செலுத்தவேண்டிய ஹஜ் முன்பணக் கட்டணம், மீதமுள்ள ஹஜ் தொகை, விமானக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் குறித்த அறிவுரைகளை அவ்வப்போது பயணிகளுக்கு அளித்தல்.

3. மக்கா மற்றும் மதீனாவில் இந்திய உதவித் தூதரகத்தின் ஒருங்கிணைப்போடு தகுந்த தங்குமிடங்களைத் தெரிவு செய்வதற்காக அலுவலர்களை கட்டடத் தேர்வுக் குழுவில் சவூதி அரேபியாவிற்கு அனுப்புதல்.

4. தமிழ்நாட்டைச் சேர்ந்த ஹாஜிகள் சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் காலத்தில், ஹஜ் பயணிகளின்

நலன்களைக் கவனிக்கும் பொருட்டு ஹஜ் தொண்டர்களை அனுப்புதல்.

5. ஹஜ் பயணிகளுக்கு கடவுச் சீட்டுகளைப் பெறுவதற்காக மண்டல கடவுச் சீட்டு அலுவலகங்களுடன் தேவைப்படும்போது ஒன்றிணைந்து பணிபுரிதல்.

6. ஒவ்வொரு வருடமும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஹஜ் வழிகாட்டி நூல்களையும் தமிழ் மொழியில் ''ஹஜ்ஜும் உம்ராவும்'' என்ற கையேட்டையும் அச்சிட்டு ஹஜ் பயணிகளுக்கு விலையேதுமின்றி வழங்குதல்.

7. சென்னை–ஜித்தா / மதீனா–சென்னைக்கு ஹஜ் விமானங்கள் இயக்கத்தின்போது வெளிமாவட்டப் பயணிகளுக்கு தற்காலிகத் தங்கும் வசதி ஏற்படுத்துதல் மற்றும் தங்குமிடத்திலிருந்து விமான நிலையம் மற்றும் திரும்பி வருவதற்கு போக்குவரத்து வசதி அளித்தல் முதலியன.



8. ஹஜ் பயணத்தின்போது பின்பற்ற வேண்டிய பயண நடைமுறை மற்றும் செயல்முறைகள் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயணிகளுக்கு பயிற்றுவிக்க பல்வேறு மாவட்ட / வட்ட தலைமையகங்களில் புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துதல்.

9. மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடுவதற்கான நிகழ்ச்சிகளை ஹஜ் பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப பல்வேறு மாவட்டங்களில் நடத்துதல்.

10. மக்கா மற்றும் மதினா நகரங்களில் ஹஜ் பயணிகளுக்குத் தங்குமிட வசதிகளை ஏற்படுத்துதல்.

11. ஹஜ் விமானங்கள் இயக்கம் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் அமைய மத்திய அரசு, மாநில அரசு, இந்திய ஹஜ் குழு, மும்பை முதலான பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களான, இந்திய விமானங்களின் ஆணைக்குழு, சுங்கம், குடியேற்றம், விமான போக்குவரத்துப் பாதுகாப்பு நிறுவனம், விமான

நிறுவனங்கள் ஆகியவற்றுடனும் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களுடனும் சேவைகளை ஒருங்கிணைத்தல்.

12. ஹஜ் பயணம் தொடர்பான இதர இடைநிகழ்வுப் பணிகள்.

**41.2. <u>குழுவிற்கான நிர்வாக மானியம்</u>**

மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டுதோறும் நிர்வாக மானியத்தை தமிழக அரசு வழங்கி வருகிறது. பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல், சொத்து வரி, மின்சார செலவினம், குடிநீர் மற்றும் வடிகால் வரி முதலிய நிருவாக செலவினங்களை தமிழக அரசால் அளிக்கப்படும் மானியத்திலிருந்து தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மேற்கொள்கிறது. **2013–2014** ஆம் ஆண்டு முதல் இம்மானியம் ரூ.20 இலட்சத்திலிருந்து, ரூ.30 இலட்சமாக தமிழக அரசால் உயர்த்தப்பட்டது. **2015–2016** ஆம்



ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**41.3. <u>ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வு குழுவில் அலுவலர்களை அனுப்புவதற்கு மானியத்தை ஒப்பளிப்பு செய்தல்</u>**

ஹஜ் பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், ஹஜ் பயணிகள் தங்கும் வசதிகளுக்காகக் கட்டடங்களைத் தெரிவு செய்ய கட்டடத்தேர்வுக் குழுவில் பிரதிநிதியை அனுப்புவதற்குண்டான செலவினத்தை மேற்கொள்ளவும், அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியங்களை அளிக்கிறது. இத்திட்டத்திற்கென, **2015–2016** ஆம் ஆண்டில் ரூ.10.29 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## முடிவுரை

தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரின் கல்வி, சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக பல்வேறு நல வாழ்வுத் திட்டங்கள் மாநிலத்தில் செவ்வனே சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வரசு இவ்வகுப்பினரின் சீரிய நலனைக் கட்டிக்காப்பதுடன் அவர்களின் முன்னேற்றத்திற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

**எஸ். அப்துல் ரஹீம்**
**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்**
**நலத்துறை அமைச்சர்**



## இணைப்பு

## 2015-2016 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

**(ரூபாய் இலட்சத்தில்)**

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 377.66 | -- | 0.01 | 377.67 |
| வக்ஃப் மற்றும் ஹஜ் குழு | 517.09 | -- | -- | 517.09 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 40121.71 | 2888.60 | -- | 43010.31 |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 39358.52 | 5178.31 | -- | 44536.83 |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 125.41 | -- | -- | 125.41 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 51.01 | -- | -- | 51.01 |
| சிறுபான்மையினர் நலன் | 11135.33 | 444.31 | -- | 11579.64 |
| **மொத்தம்** | **91686.73** | **8511.22** | **0.01** | **100197.96** |



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12.06.2015 அன்று புதிதாக கட்டப்பட்ட 80 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவ, மாணவியர் விடுதிகள் மற்றும் செக்கானூரணி, கள்ளர் சீரமைப்பு பெண்கள் மேல்நிலைப்பள்ளி கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.





மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **29.06.15** அன்று **12**ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகளை வழங்கினார்கள்



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15.07.15 அன்று 2015–16 கல்வியாண்டில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

# இட ஒதுக்கீடு விவரம்



# பிற்படுத்தப்பட்டோர் விடுதிகள் (721)



## மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகள் (580)



# சிறுபான்மையினர் விடுதிகள் (14)



# மாவட்ட வாரியான விடுதிகள் விவரம் (1315)

